சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **97 / 2017**

பெயர்: சுந்தரராஜன் வா.சா. 1 தேதி **05.02.2026**

முதல் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. பிராதினை நான் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்த கூறக்கூடிய பிராதிற்கு மாறாக முதல் விசாரணையில் புதிய விவரங்களை தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் தாக்கல் செய்ததாக கூறக்கூடிய குத்தகை பத்திரம் 16.05.2005ம் தேதியிட்டவை. மேற்படி குத்தகை பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேன். மேற்படி குத்தகை பத்திரம் எழுதிய தேதியில் சுவாதீனம் நான் எடுக்கவில்லை என்று சொன்னால் அன்றைய தினம் எடுக்கவில்லை அடுத்த நாள் தான் கொடுத்தார்கள். அடுத்த நாள் சுவாதீனம் பெற்றதாக ஆவணங்கள் எதுவும் உண்டா என்றால் இல்லை. மேற்படி குத்தகை பத்திரத்தில் கடைசி பக்கத்தில் படித்து காண்பிக்கப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி குத்தகை பத்திரம் சென்னையில் வைத்து எழுதப்பட்டதா என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி குத்தகை பத்திரத்தில் தரப்பினர்களுக்கு இடையே ஏதாவது பிரச்சனை ஏற்பட்டால் இசைவு தீர்ப்பாயம் மூலம் தீர்த்து கொள்ளவேண்டும் என குறிப்புகள் எதுவும் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. இவ்வழக்கில் குத்தகை பணம் எதுவும் நீதிமன்றத்தில் செலுத்தியுள்ளோமா என்றால் செலுத்தியுள்ளோம். எந்த காலத்தில் இருந்து எந்த காலம் வரைக்கு குத்தகை நீதிமன்றத்தில் செலுத்தியிருந்தோம் என்றால் மணிகண்டன் இறந்ததற்கு பின்னர் மேற்படி குத்தகை தொகையை செலுத்தியுள்ளோம். மேற்படி குத்தகை தொகையை கொடுத்து முதல் பிரதிவாதி வாங்க மறுத்துவிட்டார் என்பதற்காக அறிவிப்பு எதுவும் முதல் பிரதிவாதிக்கு கொடுத்தோமா என்றால் ஞாபகம் இல்லை.

2. பிராதில் முதல் பிரதிவாதியும், இரண்டாவது பிரதிவாதியும் என்னுடைய அனுபவத்திற்கு இடையூறு செய்ததாக வழக்கில் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். முதல் பிரதிவாதியின் வயது சுமார் 90 இருக்கும் என்றால் சரிதான். அவர் நேரடியாக வந்து இடையூறு செய்வதற்கு வாய்ப்பே இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் 25 HP ரஸ்டண் இன்ஜின் ஆயில் மோட்டார் வைத்துள்ளேன். வழக்கு சொத்தில் கிணறு வெட்டியதாக நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கிணறு எந்த மாதம், எந்த ஆண்டு வெட்டப்பட்டது என்றால் 2006ம் ஆண்டு வெட்டப்பட்டது. கிணறு வெட்டுவதற்காக உரிமம் பெறவேண்டும் என்றால் அவசியம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிராதின் சொத்து விவரத்தில் கிணறு , மோட்டார் பம்ப் செட் குறிப்பிடவில்லை

என்று சொன்னால் ஞாபகம் இல்லை. நானோ, நான் சார்ந்துள்ள டிரஸ்ட்டோ வழக்கு சொத்தை எக்காலத்திலும் அனுபவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக எனக்கு முன்னர் இருந்த மணிகண்டனுக்கும், முதல் பிரதிவாதிக்கும் என்ன பரிவர்த்தனை நடைபெற்றது என்கின்ற விவரம் எனக்கு தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. எங்களுடைய டிரஸ்ட்டின், நிர்வாக டிரஸ்டி மணிகண்டன் என்பவர் முதல் பிரதிவாதியை அழைத்துக்கொண்டு, முதல் பிரதிவாதியின் அறக்கட்டளை சம்மந்தமாக விதிகளை திருத்தம் செய்வதற்காக சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்று மோசடியாக குத்தகை பத்திரம் தயாரித்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ-6,7 ஆவணங்கள் நடைமுறைக்கு வரவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் நாங்கள் வழக்கு சொத்தினை அனுபவிக்கவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே இதே சொத்து சம்மந்தமாக நடைபெற்ற அ.வ.எண். 249/2006 வழக்கில் குத்தகை தொகை எதையும் நீதிமன்றத்தில் செலுத்தியுள்ளோமா என்றால் ராஜகோபால் நேரடியாக பெற்று கொண்டதால் குத்தகை தொகை செலுத்தவில்லை. அதற்கான ரசீது எதுவும் உள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் 11 வது பத்தியில் "அவர்கள் மிகவும் பதட்டமான மனநிலையில் உள்ளார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது" என்றால் சரிதான். பதட்டத்திற்கு பயம் என்று தான் அர்த்தம் என்றால் சரியல்ல. எங்களுடைய செயலால் தான் பிரதிவாதிகள் பயந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நாங்கள் அனுபவத்தில் இல்லை என்பதால் முதல் பிரதிவாதியை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதி தாவா சொத்தின் உண்மையான உரிமையாளர் என்பதால் உண்மையான உரிமையாளருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.02.05 15:52:48 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.